**கவனிக்க.**- *2016.08.12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1981 - 2016 අගෝස්තු මස 19 වැනි සිකුරාදා - 2016.08.19**

*1981 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## *பகுதி II - சட்ட சம்பந்தமானது*

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப் பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 150 |


**கவனிக்க.**- *சிசிர ஜயக்கொடி சியபத மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, யூன் மாதம் 03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2016, செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, ஓகத்து மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**பீ.கே.எஸ். ரவீந்திர,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித அறிவித்தல்கள்

## மேல் மாகாண மேல் நீதிமன்றம்
**(கொழும்பில் அதன் சிவில் நியாயாதிக்கத்தை பிரயோகிக்கையில்)**

வழக்கு இல. : H.C.Civil. 23/2016/ C0

தன்மை: கணக்கை தீர்த்து வைத்து மூடுதல்

கொழும்பு 02, வோக்ஷோல் வீதியில், லொட் 141/3 இல் இயங்கும் எயார்போர்ட் எக்ஸ்பிரஸ் அன்ட் ரேல் கம்பனி ( பிறைவேட்) லிமிட்டட் தொடர்பாக

மற்றும்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பந்தியின் பிரகாரம் நீதிமன்றம் ஊடாக கணக்கை தீர்த்து வைத்து மூடி விடுவதற்கான வேண்டுகோள் தொடர்பாக

ஜே. ஏ.எம்.எஸ். கருணாதார,
இல. 674, குலரத்ன மாவத்தை, கொழும்பு 10.

முறைப்பாட்டாளர்

அனைவருக்கும் இத்தால் அறிவிப்பதாவது, மேற் கூறப்பட்ட முறைப்பாட்டாளராகிய கொழும்பு 10,குலரத்ன மாவத்தை,இல. 674 இல் வசிக்கும் ஜே.ஏ.எம். எஸ். கருணாதார அவர்களால் மேற்கூறப்பட்ட ஏயார்போர்ட் எக்ஸ்பிரஸ் அன்ட் ரேல் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் கம்பனியை முடிவுறுத்தல் தொடர்பாக உத்தரவைப் பெறுவதற்காக மேல் மாகாண வர்த்தக நீதிமன்றத்திடம் 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் திகதி ஒரு முறைப்பாட்டை சமர்ப்பித்துள்ளார். அது தொடர்பாக மேலும் அறிவிப்பதாவது அந்த முறைப்பாடு 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 03 ஆந் திகதி விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. மேற்கூறப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் தீர்ப்பளிப்பதற்கு, சார்பாக அல்லது எதிராக தகவல்களை சமர்ப்பிக்க விரும்பும் எந்த கடன் வழங்கியவர்கள் அல்லது பங்களிப்பவர்கள் அல்லது கம்பனிகள் இருப்பதாயின் மேற்கூறப்பட்ட முறைப்பாட்டை விசாரணைக்கு எடுக்கும்போது நேரடியாகவோ அல்லது சட்டத்தரணியூடாகவோ கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு அறிவித்து அது தொடர்புடைய கட்டணங்களைச் செலுத்தி பின் அவ்வாறு செய்யலாமென அறிவிக்கிறேன்

கையொப்பமிட்டவர்,
சட்டத்தரணி எம்.எப்.எம். ஜஸ்மின்,
இல. 152/B/4, புதுக்கடை,
கொழும்பு 12.
தொ.பே. இல. 0777303141

**கவனிக்க வேண்டியவை.-** மேற்கூறப்பட்ட முறைப்பாட்டை விசாரணைக்கு எடுக்கும் போது ஆஜராக விரும்பும் எவரும் மேற்கூறப்பட்ட சட்டத்தரணி எம். எப். எம் ஜஸ்மினிடம் எழுத்து மூலமாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ தமது விருப்பத்தைத் தெரிவிக்க முடியும். அவ்வாறு அறிவிக்கும் போது தனிநபராயின் தனது பெயர் மற்றும் முகவரி அல்லது தொடர்புற்ற சட்டத்தரணியின் (அவ்வாறு இருப்பதாயின்) பெயர் மற்றும் முகவரியை 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி மாலை 6.00 மணிக்கு முன் ஒப்படைக்க வேண்டும். தபாலில் அனுப்புவதாயின் தபால் கிடைப்பதற்காக போதியளவு நாட்கள் வைத்து தபால் செய்ய வேண்டும்.

சட்டத்தரணி எம்.எப்.எம். ஜஸ்மின்,
இல. 152/B/4, புதுக்கடை,
கொழும்பு 12.

8- 408/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.